# சீதாவாக்க பிரதேச சபை
## கொழும்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த சீதாவாக்க பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்குகளில் காணப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள், வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் நிலை மற்றும் மீதிகள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| | | கணக்கின் மீதான தாக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
| | | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | | ரூபா 000' | | ரூபா 000' | | ரூபா 000' | | ரூபா 000' |
| (அ) | கணக்குகளில் அதிகரித்துக் காட்டுதல் | 02 | 944 | - | - | 01 | 10,415 | 03 | 12,561 |
| (ஆ) | கணக்குகளில் | 01 | 247 | - | - | - | - | 02 | 12,917 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குறைத்துக் காட்டுதல் | | | | | | | | |
| (இ) | கணக்குகளில் இருந்து விடுபடுதல் | - | - | 01 | 124 | 01 | 92 | 01 | 489 |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்கள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,803,540 ஆக இருந்ததுடன், துணைப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 55,312,563 ஆகும்.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்கு மீதிகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 2,225,018 கூட்டுப்பெறுமதியான கணக்கு மீதிகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டதுடன், முன்னைய வருடங்களில் எனது அறிக்கைகளில் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 457,989 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது

### 1.3.5 இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 229-1001-7-3826543 ஆம் இலக்கம் கொண்ட வங்கிக் கணக்கில் வழங்கப் பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 17,434 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 570, 571, மற்றும் 572 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 13,266,118 தொகையான வைப்புக்கள் மீளச்செலுத்த வேண்டிய வைப்பாக பட்டோலைகளில் காட்டப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முன்னைய வைப்புக்கள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு அவற்றை சபையின் வருமானத்தில் சேர்ப்பதற்கோ அல்லது மீளச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 715(உ) | பொருட்களின் கிடைப்பனவு. விநியோகத்தல்கள் தொடர்பான ஆவணங்கள், உறுதிப்படுத்தல் ஆவுணங்கள் மற்றும் கணக்குகள் என்பன பேணப்பட்டிருக்கவில்லை. இருப்புப்பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிராத காரணத்தினால் பௌதீக இருப்பு மீதிகளின் உண்மைத் |

| | | |
|---|---|---|
| | | தன்மையினை உறுதிசெய்து கொள்ள முடியாதிருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 751(4) | பொருட்கள் பெறுவனவு, விநியோகித்தல் மற்றும் தொடர்புடைய ஆவுணங்களின் இலக்கங்கள் ஒழுங்கு முறையாக கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 752 | களஞ்சியத்தினுள் இராக்கைப் பத்திர முறைமை அமுல்படுத்தப்பட்டிராததுடன் இருப்புக் குறிப்புக்கள் இருப்புச் சீட்டுக்கள், பொருட்பதிவேடு போன்றவற்றுடன் இணக்கஞ்செய்து இலகுவாகவும் விரைவாகவும் சரி பிழை பார்க்கக்கூடிய முறையில் பொறுப்பிலுள்ள பொருட்கள் முறையாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2009 ஏப்ரல் 02 ஆந் திகதிய சீஎம்/டபிள்யூபீ/ஈ4/14.5 ஆம் இலக்க மேல் மாகாண பிரதம அமைச்சரின் கடிதம் | கழிவுப் பொருள் முகாமைத்துவ ஒப்பந்தத்திற்கு இணங்குவதற்கு முன்னர் அது தொடர்பாக அறிக்கையொன்று மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,684,184 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக

முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,243,083 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்**

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பீடு | 2010 உள்ள வாறானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2009 மதிப்பீடு | 2009 உள்ள வாறானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா‘000 | ரூபா‘000 | ரூபா ‘000 | ரூபா‘000 | ரூபா‘000 | ரூபா‘000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 8,610 | 8,926 | 6,328 | 5,765 | 4,840 | 4,875 |
| (ii) | வாடகை | 12,876 | 11,059 | 2,733 | 11,282 | 9,785 | 2,585 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,495 | 1,425 | 22 | 1,382 | 1,533 | 21 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 70,748 | 60,601 | 24,734 | 60,840 | 70,581 | 3,022 |

சமர்ப்பிக்கப்பட்ட தொகைகள் கணக்குகளுடன் இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.2.2 நிலுவை வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(i) நிலுவை கடை வாடகை**

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,249,095 தொகையான கடை வாடகை கிடைக்க வேண்டியிருந்தது.

**(ii) நீதிமன்றத் தண்டப்பணம்**

2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 10,000,000 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

**(iii) முத்திரைக் கட்டணம்**

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 10,000,000 முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 கடை வாடகை

(i) வாடகை ஒப்பந்தத்தின் இல. 27 இன் நிபந்தனையின் பிரகாரம் வாடகையாளர்களினால் உரிய சொத்துக்கள் முழுமையாக அல்லது பகுதியாக வேறொருவருக்கு விற்பனை செய்தல் அல்லது உப வாடகைக்கு விடல் என்பன மேற்கொள்ளமுடியாதிருந்த போதிலும் 13 கடைகள் வாடகையாளரினால் வாடகைப் பணம் அறவிடப்பட்டு வெளியார் தரப்பினருக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ii) 43 வியாபாரக் கடைகளில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 548,956 கூட்டுப் பெறுமதியான 03 மாதத்திற்கு மேற்பட்ட நிலுவை கடை வாடகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் வாடகை ஒப்பந்த இல. 03 இன் நிபந்தனையின் பிரகாரம் வியாபார உரிமையினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து மூடப்பட்டிருந்த ஹங்வெல்ல புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 49 ஆம் இலக்க கடை தொடர்பாக சபையினால் வாடகையாளருடன் உடன்பட்டிருந்த வாடகை ஒப்பந்தத்தின் இல. 16 இன் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 41,405 | 40,382 | 1,023 | 42,338 | 39,087 | 3,251 |
| ஏனையவை | 34,721 | 32,537 | 2,184 | 37,010 | 32,921 | 4,089 |
| உப கூட்டுத் தொகை | 76,126 | 72,919 | 79,348 | 3,207 | 72,008 | 7,340 |
| மூலதன செலவுகள் | 27,935 | 53,401 | 47,575 | (25,466) | 90,911 | (43,336) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 104,061 | 126,320 | 126,923 | (22,259) | 162,919 | (35,996) |

## 2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம் / செலவு மற்றும் உள்ளபடியான வருமானம் / செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ளக்கூடியளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ள வாறான பதவியணிகள்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 06 | 04 |
| இரண்டாம் தரத்தினர் | 40 | 35 |
| ஆரம்ப தரத்தினர் | 137 | 128 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 37,062,536 ஆக இருந்ததுடன், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த பதவியினர் கடன்முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,397,211 ஆக இருந்ததுடன், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமையினால் நிலுவையாக இருந்த கடன் சம்பந்தமாக கணக்காய்வில் அவதானிப்புக்களை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 2.6.3 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஏட்டுப் பெறுமதியில் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 20,637,262 ஆகும்.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### பொது வசதிகளுக்கான காணி

சபையின் பொது வசதிகளுக்கான 03 காணிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் காணியைச் சுற்றி வேலி அடிக்கப்பட்டு சபைக்குச் சொந்தமானது என்பதற்கான பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு காணிக்குரிய அளவிடை வரைபடத் திட்டம் கோவையினுள் உள்ளடக்கப்பட்டிராததுடன் பின்புறக் காணியின் உரிமையாளரினால் பொது

வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் ஊடாக வீதியொன்றை அமைத்திருந்தார்.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவ சேவை வழங்கும் நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தத்திற்கு உடன்படாமல் 2010 மே முதல் திசெம்பர் வரை ஒரு சேவைக்காக ரூபா 2,978,136 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 5.4.8(அ) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 5% செயலாற்றல் காப்பொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரமும் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2003 திசெம்பர் 17 ஆந் திகதிய எல்ஜீடீ/07/03/02(II) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரமும் சபைக்குச் சொந்தமான வீதிகளின் நிலையான மாதிரி அடையாளம் மற்றும் எல்லையை அடையாளப்படுத்துதல் மற்றும் அவற்றின் வரைபடங்களைத் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2010 ஆம் ஆண்டில் பாதீட்டில் அந்நடவடிக்கைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 நிதிஏற்பாட்டில் எவ்வித செலவினமும் செய்யப்படாதிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு